# தெரணியகல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 14 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 01 ஆம் திகதி கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தெரணியகல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் வருடத்திற்காக கிடைத்திருந்த ஏக்கர் வரி வருமானம் ரூபா 1,477 மற்றும் ஆதனவரி ரூபா 31,340 உம் வருடத்தின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் வருடத்தின் வருமானம் ரூபா 32,817 இனால் அதிகரித்தும் முற்பணமாக பெற்றவைகள் இப் பெறுமதியினால் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த முச்சக்கர வண்டி தரித்தப்படக் கட்டணம் ரூபா 380,150 தொகையானது கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தது நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற அரச மானியமான ரூபா 591,926 தொகையும் காசு மாற்றங்கள் ரூபா 505,000

காசு மீதியையும் தேவையான நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து சீராக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,283,507 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,564,634 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,742,732 ஆக இருந்தது.

### 1.3.4 இணக்கமின்மைகள்

பெறுமதி சேர்வரி (நிறுத்தி வைத்தல்) பிரிவின் 2007 யூன் 08 ஆந் திகதிய வீடப்/06/06/07 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2007 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் முகவர் நிறுவனங்களினால் அம்முகவர் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற வழங்கல்களின் அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கும் சேவை வழங்குனர்களுக்கும் செலுத்தவேண்டிய பெறுமதி சேர்வரியில் 33 $^1/_3$% பிடித்து வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 2,550 தொகையினை இதன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,495,926 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,605,989 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 கிடைக்க வேண்டிய வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 2,402 | 1,835 | 1,446 | 2,325 | 1,707 | 1,425 |
| (ii) | வாடகை | 1,997 | 1,991 | 6 | 1,090 | 1,074 | 17 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 785 | 785 | 11 | 787 | 778 | 26 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,594 | 4,575 | 4,469 | 3,784 | 445 | 3,700 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 05 நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை கணக்கிட்டு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 2,268,505 ஐ ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,937,360 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 ஆதனவரியும் ஏக்கர் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 166 ஆம் பிரிவுகளின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஏதாவது ஆதனவரியோ அல்லது ஏக்கர்வரி செலுத்தாமை சம்பந்தமாக அவ்வரி அறவிட வேண்டிய இடத்தின் உரிமையாளருடைய சொத்துக்களை தடைசெய்து விற்பனை செய்வதன் மூலம் அவ்வரித் தொகையினை அறவீடு செய்து கொள்ள முடியுமாக இருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 473,544 தொகையான நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டது | உள்ள வாறானது | முரண் | பாதீடு செய்யப் பட்டது | உள்ள வாறானது | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 9,221 | 8,884 | 337 | 8,947 | 7,981 | 966 |
| ஏனையவை | 5,494 | 4,751 | 743 | 3,744 | 4,777 | (1,033) |
| உப மொத்தம் | 14,715 | 13,635 | 1,080 | 12,691 | 12,758 | (67) |
| மூலதனச் செலவினம் | 33,315 | 3,448 | 29,867 | 25,435 | 9,842 | 15,593 |
| மொத்தம் | 48,030 | 17,083 | 30,947 | 38,126 | 22,600 | 15,526 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 13 | 10 |
| ஆரம்ப தரங்கள் | 16 | 16 |
| வேறு (அமைய, தற்காலிக) | 03 | 11 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

பௌதீக சொத்துக்கள் சம்பந்தமான தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது ரூபா 577,258 தொகையான சொத்துக்கள் செயற்பாடற்றும் குறைப்பயன்பாடுடையதுமாகவும் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

### 2.5.2 பெறப்படவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்படவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,964,079 ஆக இருந்ததுடன், அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,189,822 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,261,069 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 268,788 ஆக இருந்தது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முறையாகச் செய்வதற்காக 2010 சனவரி 21 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV ஆவது பகுதியில் உப விதிகளில் பிரசுரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டது.

(அ) நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த மோட்டர் வாகன கட்டுப்பாட்டாளரினால் 2010 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட்டிருந்த கட்டணத்தின் அளவு ரூபா 99,440 ஆக இருந்ததுடன் அக்காலப் பகுதிக்காக சம்பளமாக அவருக்கு ரூபா 282,531 பணம் செலுத்தப்பட்டமையினால் சபைக்கு ரூபா 183,091 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) கடமைகளுக்கு சமூகமளிக்காத 129 தினங்களுக்காக ரூபா 120,827 கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

(அ) முழுமையாகக் கைவிடப்பட்ட செயற்திட்டம்

மதிப்பிடப்பட்ட ரூபா 143,400 கிரயமான செயற்திட்டமொன்று முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிர்மாணங்கள்

நிர்மாணங்கள் சம்பந்தமாக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது காணப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

(i) வீதி கொங்ரீட் இடப்பட்டு அவைகளைச் செப்பனிடுவதற்காக 14 நாட்கள் செல்வதற்கு முன்னரே தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்குரிய கோவைகளைப் பரிசோதனை செய்த போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட திகதிக்கு முன்னரே வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | வேலைகளின் பெயர் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | தெமெத தந்ரிக் கந்த வீதி கொங்ரீட் இடல் | உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் இயலுமைக்கான சான்றுப்பத்திரம் விநியோகித்தல் 2010 மார்ச் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்தினமே வேலை பூர்த்தியடைந்திருந்ததாக உரிய சமுர்த்தி படையணியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | மங்சனாயக்க மாவத்தை ஊடாக நாவெல வீதி அபிவிருத்தி செய்தல் | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியான 2010 ஒக்தோபர் 18 ஆந் திகதி வேலை முடிவடைந்ததாக உரிய சங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வேலை உறுதிப்படுத்தல் திகதி மற்றும் பரீட்சிக்கப்பட்ட திகதியாக 2010 ஒக்தோபர் 29 என காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளளிப்புக்காக பிரதான அமைச்சிடம் 2010 ஒக்தோபர் 28 ஆந் திகதியே கோரப்பட்டிருந்தது. |
| (இ) | மாவதென்ன வீதியின் சாடாகந்த பகுதிக்கு கொங்ரீட் இடுதல் | 2010 ஒக்தோபர் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அத்தினமே செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதாக உரிய படையணியினால் அறிவிக்கப்பட்டிருந்தது. கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதியாக 2010 மார்ச் 12 எனவும் முடிவடைந்த திகதியாக 2010 மார்ச் 13 ஆந் திகதி எனவும் காண்பிக்கப்பட்டிருந்தது. |

(iii) நக்காவிட்ட பாடசாலை அருகிலிருந்து கோயில் வீதி கொங்ரீட் இடுவதற்காகவும் பேறுபல்ல கடவத்தை வீதி கொங்ரீட் இடுவதற்காகவும் வேலைகளுக்கு ஏற்படுகின்ற அளவிடைப்பத்திரங்கள் மற்றும் செலவு மதிப்பீடு எவ்வித உத்தியோகத்தரினதும் அங்கீகாரமின்றி மாற்றப்பட்டு வேலை அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(இ) சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு